செய்தி வெளியீடு எண்: 595 நாள் :06.11.2013

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

குடும்ப அட்டைகளில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் நவம்பர் 2013 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்ட முகாம் 09.11.2013 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும், தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை மாநகராட்சி உருது துவக்கப் பள்ளி, காத்படா 3வது குறுக்கு தெரு, சென்னை–21 (தங்கசாலை மணி கூண்டு அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை உயர்நிலைப்பள்ளி, 2/1, மணிகண்டன் 8வது தெரு, பழையவண்ணாரப்பேட்டை, சென்னை 21. (பிக்பஜார் எதிரில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை தொடக்கப் பள்ளி, 14வது கிழக்கு குறுக்கு தெரு, மகாகவிபாரதியார்நகர், சென்னை–39. |
| 4 | அண்ணாநகர் | சென்னை நடுநிலைப்பள்ளி, 383&385 ஈ.வெ.ரா பெரியார் சாலை, அமைந்தகரை, சென்னை–29. (பில்ராத் மருத்துவமனை எதிரே) |
| 5 | அம்பத்தூர் | சென்னை நடுநிலைப்பள்ளி, பட்டரவாக்கம் (5வது தெரு முடிவில்) அம்பத்தூர், சென்னை–98 (National Switch Gear Factory அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, சிட்கோ நகர், 4வது மெயின்ரோடு, வில்லிவாக்கம், சென்னை – 49. (சிட்கோ நகர் வாட்டர்டேங்க் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | ஸ்ரீமதி மோகினி சரோகி விவேகானந்தா வித்யாலயா, ஜோதிநகர் 4வது தெரு, திருவொற்றியூர், சென்னை –19. (விம்கோ நகர் ரெயில் நிலையம் பின்புறம்) |
| 8 | ஆவடி | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, 1 நீலமேகம் தெரு, காமராஜர் நகர், ஆவடி, சென்னை–71. |
| 9 | தி.நகர் | அரசினர் மேல்நிலைப்பள்ளி, (மேற்கு மாம்பலம், புதுார்) டாக்டர் அம்பேத்கார் சாலை, அசோக்நகர், சென்னை–83. (ஜவஹர் வித்யாலயா அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | ராணி லேடி மெய்யம்மை மேல்நிலைப்பள்ளி, 30/75, 4வது பிரதானசாலை, காந்திநகர், அடையாறு சென்னை–600 020. (மலர் மருத்துவமனை பின்புறம்) |
| 11 | பரங்கிமலை | ஏ.ஜி.எஸ் நிதி மேல்நிலைப்பள்ளி, பொன்னியம்மன் கோயில் தெரு, ஆலந்தூர், சென்னை 600 016. (ஆலந்தூர் சுரங்கப்பாதை அருகில்) |
| 12 | தாம்பரம் | திருநீர்மலை பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி, திருநீர்மலை மெயின் ரோடு, திருநீர்மலை, சென்னை. 600044 |
| 13 | சைதாப்பேட்டை | கிறிஸ்டியன் மெட்ரிக்குலேஷன் பள்ளி, 3 வண்டிக்காரன் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை– 600 092. |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, 4 ஸ்ட்ராஹன்ஸ்சாலை, பட்டாளம், சென்னை 600 012. (ஜி3 காவல் நிலையம் அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, 139 பெல்ஸ்ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை–600 005. (கஸ்தூரிபாய் மருத்துவமனை எதிரில்) |
| 16 | சோழுங்கநல்லூர் | பெரும்பாக்கம் பஞ்சாயத்து அலுவலகம், பெரும்பாக்கம், சென்னை–600 100. (பெரும்பாக்கம் சமூக நலக்கூடம் அருகில்) |

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9